உ

வண்ணச்சரபரின் குன்றக்குடிப் பதிகம் - 2

காப்பு - வெண்பா

குன்றா அருள்விளக்கும் குன்றக்குடியில் வந்து
நன்றாம் பதிகம் நவில்வதற்கு - மின்தாழும்
வாகைவடி வேற்கை மன்னனுக்கு முன்உதித்த
தோகையடிப் பிள்ளை துணை.

குறிப்புரை : விளக்கும்= விளங்கச்செய்யும். மின்தாழும்= மின்னலை வென்ற. தோகையடிப் பிள்ளை= அருள்தரு தோகையடிப் பிள்ளையார். இவர் தலவிநாயகர். ஏறுபடிகளின் தொடக்கத்தில் எழுந்தருளி அருள்வழங்குகிறவர்.

பொழிப்புரை : வழிபடுகிறவர் உள்ளத்தில் தனது குன்றாத அருளை விளங்கச்செய்யும் குன்றக்குடிக்கு வந்து நன்மைதரும் பதிகம் சொல்ல, மின்னலை வென்றதும் வெற்றிதருவதுமாகிய வேலினை ஏந்திய அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்கு முன்தோன்றிய அருள்தரு தோகையடிப் பிள்ளையார் துணையாவார்.

நூல்

அறுசீர்த் தாழிசை

பொன்மயல் கொண்டுதெ ருத்தொறும் ஊர்தொறும் போகா(து) உனைநாடி
நன்மகிழ்(வு) எய்திநின் ஆறெழுத் தேமிக நவிலப் பெறுவேனோ
பன்மறை யும்புக ழும்குரு வேமயில் பரியே றிநடாவும்
கொன்மலி யும்குக னேவளம் மேவிய குன்றக் குடியானே.

குறிப்புரை : கொன்= பெருமை.

பொழிப்புரை : மறைகளும் புகழும் குருவே ! மயிலாகிய குதிரைமேல் ஏறி அதனைச் செலுத்தும் பெருமைமிக்க குகனே வளமான குன்றக்குடியானே பொன்னின்மேல் ஆசைகொண்டு தெருக்கள்தொறும் ஊர்கள்தொறும் போகாமல் உனது திருப்பெயரும் மந்திரமுமாகிய சரவணபவ என்கிற திருஆறெழுத்தையே மிகுதியும் ஓதும் நிலைபெறுவேன்.

2. அற்றம்அ றிந்து)உ தவத்தகும் நின்அருள் அதையே கருதாமல்
மற்றதை யும்பொருள் ஆமென நாடிடும் மடமென்(று) ஒழிவேனோ
பற்றலர் அஞ்சிவ ணங்கிடக் கூவிய பறவைக் கொடிவாழ்வே
குற்றமி லார்பர வும்புகழ் தோய்தரு குன்றக் குடியானே.

குறிப்புரை : அற்றம்= துன்பம். பற்றலர்= பற்றுஇல்லாதவர்.

பொழிப்புரை : உன்மேல் பற்றுஇல்லாதவரும் அஞ்சிவணங்குமாறு கூவும் சேவற்கொடி ஏந்தியவனே ! குற்றமில்லாத அடியவர் வணங்கும் குன்றக்குடித் தெய்வமே ! என்துன்பத்தை அறிந்து உதவும் நின்அருளைக் கருதாமல் பிறவற்றையும் பொருளென்று கருதும் என்அறியாமையை நான் ஒழிப்பது எந்நாளில் !

3. எங்கும்உன் அன்பன் எனப்பல ரும்புகழ் இயல்புற் றும்என்நெஞ்சம்
பொங்கும் மிடிக்கன லால்மிக வாடிடப் போமோ அருள்பொய்யொ
சங்குபு னைந்தொளிர் காதுடை யான்விழி தருசண் முகநாதா
கொங்கும லர்ப்பொழி லால்முகில் ஓவரு குன்றக் குடியான.

குறிப்புரை : பொங்குமிடிக் கனல்= மேன்மேலும் மிகும் வறுமைத்தீ. கொங்கு= தேன்.

பொழிப்புரை : ஒளிரும் சங்குக்காதணியுடைய சங்கரனின் நுதற்கண் தந்த அருள்தரு சண்முகநாதா ! தேன்பொருந்திய மலர்ச்சோலைகள் காரணமாக இடையறாது மழைமேகம் தங்கும்குன்றக்குடியானே ! எல்லாவிடத்தும் என்னை உன்அன்பன் என்று பலரும் புகழும் இயல்பினைப் பெற்றிருந்தும் மேன்மேலும் மிகும்வறுமைத்தீயால் நான்வாடவேண்டுமா ? உன்அருள் பொய்யாகுமா ?

4. காலன்வ ரும்கொடி(து) எண்ணுகி லாரது கைப்புன் பொருள்நாடி
சாலவ ருந்தவி டுத்தனை யேஇது ததிஎன்(று) அறியாயோ
மாலவ னும்புக ழப்பொரும் வேல்புனை வலிமைக் குகவேளே
கோலம றைத்திரள் ஓலிட நீடிய குன்றக் குடியானே.

குறிப்புரை : கொடிது= கொடியவனாய். ததி= தக்கசமயம்.

பொழிப்புரை : திருமாலும் புகழுமாறு போரிடும் வேலேந்திய வலிமைவாய்ந்த விரும்பத்தக்க குகனே ! அழகிய அனைத்து மறைகளும் உன்அருள்பெற உன்பால் முறையிட, சிறந்த குன்றக்குடியில் எழுந்தருளிய

பெருமானே ! யமன் கொடியவனாய் வருவான் என்று எண்ணாதவர்களின் அற்பப்பொருளை விரும்பி, நான் மிகவருந்த என்னைக் கைவிட்டாய். என்னைக் காக்க இதுவே தக்கசமயம் என்பதை நீ அறியவில்லையா ?

5. அன்றுது யின்றிடும் வேளையில் வந்(து)எனை அருணைக் கிளிதான்நீ
என்றுப கர்ந்தனை இப்படி விட்டிடல் இயல்பாம் எனலாமோ
நன்றுமி கும்துதி பாடிய கீரனை நலியா(து) அருள்செய்தாய்
குன்றுதோ றாடலின் முந்திய தாகிய குன்றக் குடியானே.

குறிப்புரை : அருணைக்கிளிதான் நீ= நீ முற்பிறப்பில் அருணகிரியார் ஆகிய கிளியாவாய். விட்டிடல்= காவாது கைவிடல்.

பொழிப்புரை : குன்றுதோராடல் படைவீட்டில் முதன்மையானதான குன்றக்குடிப் பெருமானே ! நன்மைமிக்க திருமுருகாற்றுப் படையால் உன்னைப் போற்றிய நக்கீரரைப் பூதம் துன்புறுத்தாது அதனிடமிருந்து விடுவித்துக் காத்தாய். நான் அன்றொருநாள் துயிலும்போது கனவில் வந்து " நீ முற்பிறப்பில் அருணகிரியாராகிய கிளியாக இருந்தாய் " என்று கூறியநீ என்னை ஆதரிக்காமல் கைவிடுவது உன் இயல்பல்ல. காத்தருள்.

விளக்கம் : பிறபடைவீடுகள் தனித்தனி ஒவ்வொரு தலங்களைக் குறிக்க, ஐந்தாம் படைவீடாகிய " குன்றுதோராடல் " என்பது குமரன் குடிஇருக்கும் குன்றுகள் அனைத்தையும் குறிக்கும். இவற்றுள் முதன்மை பெற்றது குன்றக்குடியாகும் என்பது அடிகளின் முடிந்த முடிபு. அதனால் இதனை இவர்பலஇடங்களில் தொடர்ந்து கூறியுள்ளார்.

6. இச்சைவ ழிப்படும் என்னையும் நின்னருள் எய்தும் பெரியோர்போல்
பிச்சைஅ ருத்திமு ழுத்திரு நீறணி பீடுற் றிட வைத்தாய்
செச்சைம லர்ப்புரை யும்தமிழ் பாடிய திறலா ளர்கள் மிகையால்
கொச்சைய றக்கிளி பேசிய சீர்திகழ் குன்றக் குடியானே.

குறிப்புரை : செச்சைமலர்= செந்நிற வெட்சிப்பூ. பிச்சை= தகுதியறிந்து இடும்பிச்சை.

பொழிப்புரை : செந்நிற வெட்சி மலர் போன்றசிறப்புடைய தமிழ்ப்பா பாடிய பெருந்திறல் மிக்கவர் மிகுதியாக வாழ்வதால், அவர்களின் நல்லதமிழைக் கேட்ட கிளிகளும் அவ்வாறே பேசும் சிறப்புவாய்ந்த குன்றக்குடிப் பெருமானே ! பற்றுவழிப்படும் என்னையுமுனது அருள்பெற்ற பெரியவர்களைப்போல்,

தக்கவரிடும் பிச்சையை உண்டும், உடல்முழுதும் திருநீறு அணியுமாறும் செய்தாய். என்னே உன்கருணை !

7. சிட்டர்த மக்(கு)உற(வு) ஆகிஉன் அன்பர்கள் செப்பா நெறிசெல்லும்
துட்டர்த மைக்கறு வும்பெரி யோர்அடித் துகள்சூ டுதல்வம்போ
மட்டவிழ் நீபம லர்ப்புய னேஎழில் மான்தோல் பறைவேடர்
கொட்டவி ளங்குகு றிச்சியுள் சீரிய குன்றக் குடியானே.

குறிப்புரை : சிட்டர்= தவத்தோர். செப்பாநெறி= தீயநெறி. மட்டு= தேன். குறிச்சியுள் சீரிய= மலையூர்களில் சிறந்த. நீபமலர்= கடப்பமலர். கறுவும்= சினக்கும். வம்போ= தீயசெயலா? இல்லை

பொழிப்புரை : தேன்அவிழ் கடப்பமலர் மாலையணிந்ததிருத்தோளனே ! அழகிய மான்தோல் போர்த்த பறையை வேடர் முழக்கும் குறிஞ்சிநிலத்து ஊர்களில் சிறந்த குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானே ! தவத்தோர்களுக்கு உறவினராகியும் உன்அன்பர்கள் கூறாத தீயவழியில் நடக்கும் துட்டர்களைச் சினக்கும் பெரியோர்களின் அடிப்பொடியைச் சூடுதல் தீயசெயலன்று.

8. காழிந கர்ப்புல வோன்நிக ராமொரு கவிநா யகன்வந்(து)இங்(கு)
ஏழிசை யில்தமிழ் பாடிடும் நாள்வரில் என்நெஞ்(சு) அமையாதோ
தோழிய ரோடுறும் வேடமின் னாள்அடி தொட்டுப் பணிவோனே
கோழிவ ரைந்தகொ டிக்(கு)அழ காம்உயர் குன்றக் குடியானே.

குறிப்புரை : காழிநகர்ப் புலவோன்= சீர்காழித் திருஞானசம்பந்தர். அமையாதோ= நிறைவடையாதோ - நிறைவடையும். வேடமின்னாள்= மின்னலொத்த வள்ளிநாயகி. கொடிக்கு அழகாம்= கொடியால் அழகுபெற்ற.

பொழிப்புரை : தனது தோழியருடன் உள்ள வள்ளிநாயகியின் கால்தொட்டுப் பணிபவனே ! சேவற்கொடியால் அழகுபெற்ற சிறந்குன்றக்குடிப் பெருமானே ! சீர்காழித் திருஞானசம்பந்தரை ஒத்த கவிப்பெருந்தலைவன் இங்குவந்து ஏழிசையில் தமிழ்பாடும் நாள்வரின் என்மனம் நிறைவடையும்.

இலக்கணக்குறிப்பு : கொடிக்கு அழகாம் - உருபுமயக்கம்.

9. சஞ்சலம் உற்றுவ ணங்கிய வானவர் தம்மூர் மகிழ்வெய்த
வஞ்சம னத்தின னாகிய சூரனை வதைசெய் தனையன்றோ

நஞ்சம் அயின்றவ னுக்(கு)ஒரு மெய்ப்பொருள் நல்கும் குருநாதா
குஞ்சரி பாகம்இ ருப்பவ னேஎழில் குன்றக் குடியானே.

குறிப்புரை : ஊர்= அமராவதிநகர். மெய்ப்பொருள்= ஓங்காரம். குஞ்சரி= தெய்வயானையம்மை. பாகம்= தன்ஒருபக்கம்.

பொழிப்புரை : நஞ்சுண்ட சிவபிரானுக்கு ஓங்காரப்பொருள் உபதேசித்த குருநாதனே ! தெய்வயானையம்மையை ஒருபக்கம் கொண்டிருப்பவனே ! அழகிய குன்றக்குடிப் பெருமானே ! மனம் வருந்திவந்து வணங்கிய அமரவதி நகரினர் மகிழ, வஞ்சமனம் கொண்ட சூரனை நீ வதைத்தாய். என்னே உன்கருணை !

10. ஆடைஎ னப்புலித் தோலைஉ டுத்தவன் ஐந்(து)ஆ யுதம்வைத்தோன்
மாடைநி றத்(து)அயன் என்(று)ஒரு மூவர்கள் வாழ்வும் தருவாயோ
ஓடைவ ழிக்கொடு மத்தகம் மீ(து)இழி உறுமா மதவேழம்
கோடைஇ டித்தொனி நாணமு ழங்கிய குன்றக் குடியானே.

குறிப்புரை : புலித்தோலை உடுத்தவன்= சிவன். ஐந்து ஆயுதம் வைத்தோன்= சங்கு,சக்கரம், வில், வாள், கதை ஆகிய ஐந்து ஆயுதமுடைய திருமால். மாடை= பொன். ஓடை= யானையின் முகத்தில் அணியும்ஒருவகை அணிகலன். மத்தகம் மீது இழி= மத்தகத்தில் இருந்து இறங்கும். மத்தகம் மீது உறுமாமதம் ஓடைவழிக்கொடு இழிமா வேழம்.

பொழிப்புரை : மத்தகத்திலிருந்து இறங்கும் மிக்கமதம் அதன் முகத்து ஓடைவழியே இறங்கும் யானையின், கோடைஇடிஒலியும் நாணமுழங்கும் பிளிறுதலுடைய குன்றக்குடியில் எழுந்தருளிய அருள்தரு சண்முகநாதப் பெருமானே ! புலித்தோலை ஆடையாக உடுத்த சிவன், ஐவகை ஆயுதங்கள் கொண்ட திருமால்,பொன்னிறத்து நான்முகன் ஆகியவர்களுக்கு நீ வாழ்வும் தருவாய்.

இலக்கணக்குறிப்பு : தருவாயோ - ஓகாரம் ஈற்றசை.

11. எந்தவ கைச்சம யத்தினும் அங்(கு)அவர் எண்ணும் குருவாகி
அந்தநெ றிக்குள்மு டிந்தமு டிப்பினை அருள்கின் றனையன்றோ
கந்தம லர்க்கம லத்தினும் அன்(று)உறை கருணா கரமுருகா
கொந்(து)அலர் குல்லைமு டித்தவ னேநெடும் குன்றக் குடியானே

குறிப்புரை : கந்தம்= நறுமணம். குல்லை= வெட்சிமலர்.

பொழிப்புரை : நான்முகனைக் குட்டிச் சிறையிட்ட போது படைப்புத் தொழில்புரிய அவனது மணமிக்க தாமரைமலர் இருக்கையிலும் இருந்த கருணைக்கு இருப்பிடமான முருகனே ! கொத்தாக மலர்ந்த வெட்சிப்பூச் சூடியவனே ! பெரும்புகழார்ந்த குன்றக்குடியானே ! நீ எவ்வகைப்பட்ட சமயத்திலும் அவரவ நினைக்கும் கடவுளாகை இருந்து அவரவர் கொள்கைக்குள் முடிந்தமுடிபான உயர்வை அவர்களுக்கு அருள்கிறாய்.

12. கும்பமு னிக்(கு)அரு ளும்பெரி யோன்எனும் குன்றக் குடியானைச்
செம்பது மத்தினள் வாழும்நெல் வேலியில் சிறுவன் பகர்பதிகம்
தம்பம்எ னத்தின மும்பகர் கின்றது தவமா முயல்வோரைக்
கம்பலை முற்றும்இ ருப்பிட மாகிய கலிநோய் அணுகாதே.

குறிப்புரை : சிறுவன்= சுவாமிகள் தம்மை அடக்கத்தின் காரணமாகக் கூறிக் கொண்டசொல். தம்பம்= பற்றுக்கோடு. கம்பலை= அச்சம். கலி நோய்= துன்பமும் நோயும்.

பொழிப்புரை : அகத்தியருக்கு உபதேசித்த மேலானவனென்று போற்றும் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானை, திருமகள் வாழும் திருநெல்வேலிச் சிறுவனாகிய நான் சொன்ன பதிகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு நாளும் தவநிலையில் முயல்கிறவரை, அச்சம் முற்றுதற்கு இருப்பிடமாகிய துன்பமும் நோயும் நெருங்கமாட்டா.

திருச்சிற்றம்பலம்